

## அரசுப் பணியாளர்களின் ஓய்வூதியம்

# குறைப்பு இல்லை

### – பிரதமர் உறுதி

**கோலாலம்பூர், டிச. 15-**

**அரசுப் பணியில் இருந்து ஓய்வுபெற்ற ஊழியர்கள் தற்போது பெற்றுவரும் ஓய்வூதியம் குறைக்கப்படாது. இதற்கு அரசு உத்தரவாதம் அளிப்பதாகப் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் நிர்வாக - அரசதந்திர முன்னாள் அதிகாரிகள் சங்கத்தின் விருந்தோம்பல் நிகழ்ச்சியில் சிறப்புப் பிரமுகராகப் பிரதமர் கலந்துகொண்டார்.

அவர் பேசுகையில் தற்போது வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையையும் முந்தைய ஓய்வூதியத் தொகையையும் ஒப்பிடும்போது சிறப்பு உதவி வாயிலாகத் தொடர்ந்து வழங்கப்பட்டு நிலைநிறுத்தப் படுகிறது எனப் பிரதமர் குறிப்பிட்டார்.

முன்னதாகப் பேசிய இச்சங்கத்தின் தலைவர் டான்ஸ்ரீ அப்துல் ஹலிம் அலி, ஓய்வூதியத் தொகை அடுத்தாண்டு குறைக்கப்படக்கூடும் என தமது கவலையை வெளிப்படுத்தி இருந்தார்.

ஓய்வூதியச் சட்டதிருத்தம் தொடர்பான கூட்டரசு நீதிமன்றத் தீர்ப்பு அடிப்படையில் இந்நிலை ஏற்படக்கூடும் என்ற ஆரூடத்தையும் அவர் கோடிட்டுக் காட்டினார்.

## கோலசிலாங்கூரில் திடீர் வெள்ளம்

# 2 தற்காலிக முகாம்கள் திறப்பு



ஷா ஆலம், டிச. 15-

நேற்று முன்தினம் மாலை தொடங்கி பெய்த கனமழையின் காரணமாக கோலசிலாங்கூர் பகுதியில் திடீர் வெள்ளம் ஏற்பட்டது. இதனால் 26 குடும்பங்களைச் சேர்ந்த 75 பேர் 2 தற்காலிக முகாம்களில் நேற்று முன்தினம் இரவு முதல் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஜெயா செத்தியா ஆரம்பப்பள்ளி, பாரிட் மஹாங் பாலாய் ராயா மையத்தில் அவர்கள் தங்கவைக்கப் பட்டிருப்பதாக சிலாங்கூர் மாநிலப் பொதுத் தற்காப்புப்படை பேரிடர் மேலாண்மை செயற்குழுச் செயலகத் தரப்பு அறிவித்துள்ளது.

முன்னதாக கம்போங் சுங்கை செலிசே பகுதியிலுள்ள சுங்கை பெர்ணாம் ஆற்றின் நீர்மட்டம் 27.1 மீட்டர் வரை உயர்ந்து அபாயக் கட்டத்தை அடைந்தது. ஆனால் நேற்றுக் காலை 9 மணி வரையிலான நிலவரப்படி அந்த நீர்மட்டம் குறைந்துவருவதாகவும் கூறப்பட்டது.

## அமைச்சரவை மாற்றம்:

# முகமட் ஹசானின் செல்வாக்கு பலவீனமா?

### ஸம்ரி விளக்கம்

கோலாலம்பூர், டிச. 15-

அமைச்சரவை மாற்றத்தில் அம்னோ அமைச்சர்கள் சிலருக்கு இலாகாக்கள் மாற்றப்பட்டிருப்பது அக்கட்சியின் தலைவர் டத்தோஸ்ரீ டாக்டர் அமாட் ஸாஹிட் ஹமிடியின் செல்வாக்கை வலுப்படுத்துவதற்கு அல்ல என உயர்கல்வித்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் ஸம்ரி அப்துல் காடிர் தெளிவுபடுத்தினார்.

முன்னதாகப் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் அறிவித்த அமைச்சரவை மாற்ற முடிவுகள் அம்னோ துணைத்தலைவர் டத்தோஸ்ரீ முகமட் ஹசானின் செல்வாக்கைப் பலவீனப்படுத்துவதுபோல் இருப்பதாக பெர்சத்து உச்சமன்ற உறுப்பினர் டத்தோ வான் சைஃபுல் வான் ஜான் கருத்துரைத்திருந்தார்.

முன்னதாக முகமட் ஹசான் தற்காப்புத்துறை அமைச்சர் பதவியை வகித்துவந்தார். ஆனால் அவருக்குத் தற்போது வெளியுறவுத்துறை அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது. அவர் வகித்துவந்த தற்காப்பு அமைச்சர் பதவி டத்தோஸ்ரீ முகமட் காலிட் நோர்டினுக்கு வழங்கப்பட்டுள்ளது.

எனவே இந்த அமைச்சரவை மாற்றம் வெறுமனே முகமட் ஹசானின் செல்வாக்கைப் பலவீனப்படுத்துவதோடு ஸாஹிட் ஹமிடியின் செல்வாக்கைப் பலப்படுத்தும் நோக்கத்திலானது என அரசியல் கோணத்தில் பார்க்கப்படுவதாக வான் சைஃபுல் சாடியிருந்தார்.

அவரின் கூற்றுக்குப் பதில் கூறிய ஸம்ரி, அமைச்சரவை மாற்றத்திற்கும் இந்த ஆரூடத்திற்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. அமைச்சரவையைக் கட்டமைப்பதில் பிரதமருக்கு முழு உரிமை உள்ளது என்பதை நாம் அனைவரும் புரிந்துகொண்டிருக்க வேண்டும்.

செயல்பாடுகளைத் தொடரவும் அமைச்சரவை மாற்றம் எவ்வாறு அமைந்திருக்கிறது என்பது குறித்து மக்களின் கருத்துகளைப் பெறுவதிலும் பிரதமர் சிறந்த மதிப்பீட்டைச் செய்திருப்பார் என்று அவர் கூறினார்.

இதில் அரசியல் விவகாரத்திற்குச் சம்பந்தம் இல்லை. ஆனால் அதேசமயம் தேவையற்ற கருத்துகளைப் பரப்புவோர் மீதும் நமது கவனம் இல்லை. பிரதமர்



குறிப்பிட்டதுபோல் மக்களுக்குச் சிறந்ததை வழங்குவதில் தான் மடானி அரசாங்கத்தில் கவனம் செலுத்தப்படுகிறது என்றும் நேற்று உயர்கல்வி அமைச்சில் அதிகாரப்பூர்வமாகத் தமது பணியைத் தொடங்கிய ஸம்ரி செய்தியாளர்களிடம் குறிப்பிட்டார்.


